தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில துணைச் செயலாளர் துபாய் கே.அன்வர் அலி தலைமையில்

திருச்சியில் ரமலானை முன்னிட்டு நல உதவிகள்! அமைச்சர் கே.என்.நேரு வழங்குகிறார்!

கே.என்.அருண்நேரு எம்.பி. பங்கேற்பு! டாக்டர் அ.சுபேர்கான் முன்னிலை!

திருச்சி, மார்ச் 27 - ரமலான் திருநாளை முன்னிட்டு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

29.3.2025 அன்று காலை 10.00 மணியளவில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள எல்.கே. எஸ். மஹாலில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு, தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துணைச் செயலாளர் துபாய் கே.அன்வர் அலி தலைமை வகிக்கிறார்.

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்வில் - கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள் கலந்து கொண்டு, நல உதவிகள் வழங்குகிறார்.

கே.என். அருண்நேரு எம்.பி., இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் - திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி, திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மூத்த வழக்கறிஞர் ஆர். பாஸ்கரன், பகுதிச் செயலாளர் மோகன்தாஸ், கோட்டத் தலைவர் துர்கா தேவி, மாமன்ற உறுப்பினர் புஷ்பராஜ், வட்டச் செயலாளர் மூவேந்திரன், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் எல்.மார்ட்டின் குழந்தைராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்கின்றனர்.

சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநகர அமைப்பாளர் அக்பர் அலி நன்றி கூறுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (25.03.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ் வளர்ச்சித் துறையின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில் நடைபெற்ற தமிழ் அகராதியியல் நாள் விழாவில், 2024 ஆம் ஆண்டுக்கான தேவநேயப் பாவாணர் விருது, வீரமாமுனிவர் விருது, தூயதமிழ் ஊடக விருது, நற்றமிழ்ப் பாவலர் விருது, தூயதமிழ்ப் பற்றாளர் விருது ஆகிய விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி க.பவானி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை - கிண்டி - முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலகத்தில்

மாநில - மாவட்ட வன அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்!

கதர் – வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச் 27– கதர் மற்றும் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தலைமையில் மாநில அளவிலான மாவட்ட வன அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் 24.03.2025 அன்று கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கதர் மற்றும் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் மாநில அளவிலான மாவட்ட வன அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை வேளச்சேரி(கிண்டி) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மாவட்;ட வன அலுவலர்களுடன் மாவட்ட வாரியாக வனத்துறையில் மூலம் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் அதன் முன்னேற்றம் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார். வனத்துறை மூலம் நடைபெற்று வரும் பணிகளை துரிதமாக விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

மேலும், வன உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் வன உயிரின வேட்டைத்தடுப்பு குறித்து முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வேட்டைத்தடுப்பு முகாம்கள் அமைக்க வேண்டும் எனவும், அரசு அறிவித்துள்ள பணிகள் அனைத்தையும் விரைவுபடுத்த வேண்டும் எனவும், வனப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு இன்னல் ஏற்படா வண்ணம் அவர்களது அடிப்படை தேவைகளான சாலை மற்றும் இதர வசதிகளை சட்டத்திற்குட்பட்டு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ள வேண்டும் எனவும், பழங்குடியின மக்கள் வசிக்கும் மலைப்பகுதிகளில் சாலை வசதி மற்றும் நிலுவைப்பணி களை விரைந்து முடிக்க வேண்டும் எனவும் அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், யானை மனித முரண்பாடுகளை தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும்,காட்டுப்பன்றிகளை அப்புறப்படுத்துவதற்கும், அதனால் வேளாண் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கும் வண்ணமும் ஏற்கவே உத்தரவிடப்பட்;ட அரசாணையின் படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார். வன உயிரினங்களின் நீர்தேவையை தீர்க்கும் வண்ணம் ஏற்கனவே உத்தரவிடப்பட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று வனத்துறை அமைச்சர் கூறினார்.

இக்கூட்டத்தில் முதன்மை தலைமை வனப்பபாதுகாவலர் மற்றும் துறைத்தலைவர் சீனிவாஸ் ராரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ்குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை திட்ட இயக்குநர் ஐ.அன்வருதின், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாஷீஷ் ஜானா, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) முனைவர் நாகநாதன், இணை இயக்குநர் திருமதி. தமிழ்மொழி அமுது மற்றும் அனைத்து மாவட்ட வன அலுவலர்கள், வனத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

நாமக்கல் மார்ச் 27- நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நடத்துவது தொடர்பாக மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை (28 ந் தேதி வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள கொங்கு சமுதாய கூடத்தில் மாவட்ட அவைத் தலைவர் இரா.நடன சபாபதி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1.கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடத்துவது தொடர்பாக,

2. இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து பொதுக் கூட்டம் நடத்துவது குறித்து,

3. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாட்டக் கழகப் பொறுப்பாளர் கே. எஸ்.மூர்த்தி அறிவித்துள்ளார்.

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை! ஏ.ஜி.ஜெ.பிரபாகரன் வரவேற்புரை!

சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடிவடபாதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்!

கரூர் முரளி சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை. மார்ச். 27- மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் எடக்குடிவடபாதியில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மனற் உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். சீர்காழி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜெ. பிரபாகரன் வரவேற்றார். சீர்காழி மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஜி.வீரமணி, இரா.முருகன், கே.சசிக்குமார், கலைச்செல்விதியாகராஜன்,எச்.முகமதுஇத்ரீஸ், பி.அன்பழகன், சி.விஜய குமார், பூ.மகேந்திரன், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.கே.பிரபாகரன், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் வி.விஜயராணி, கிளை கழக நிர்வாகிகள் கே.இரவிச்சந்திரன், ஆர்.எழிலரசன், சி.ஜெயபால், கே.திருமன்னன், ஈ.இராஜேஷ், எஸ்.முரளிதரன், கே.காந்தி, வி.எழிலரசி, ஜெ.நீலவாதி, ஆர்.பிரசாத், ஏ.சிற்றரசன், .கோர்த்தி, பி.சந்திரசேகரன், கே.மோகன், டி.சத்தியராஜ், ஆர்.சுபாஷ், ஆர்.முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் கரூர்.முரளி சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாயம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சுழசு கொள்கை பரப்பு தூணச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, பொருளாளர் மகா அலெக்சாண்டர், நகரக் கழகச் செயலாளர்கள் ம.சுப்பராயன், குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலளார்கள் பஞ்சுகுமார், செல்லசேதூவிக்குமார். மலர்லிழிதிருமாவளவன், கு.வைத்தியநாதன், வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் செயலாளர் எம்.அன்புச்செழியன், பொதுக்குழு உறுப்பினர்கள் வைத்தீஸ்வரன் கோயில் எஸ்.சுவாமி நாதன், சுபா நெடுஞ்செழியன், எம்.பி.கென்னடி, நந்தம் ஏ.வின்சென்ட், பி.சி மற்றும் கலந்து கொண்டனர்.

முடிவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் குண.தென்னரசன் நன்றி கூறினார்.

திருப்புவனத்தில்புதியபேருந்துநிலையம்அமைக்கசட்டப்பேரவையில்அறிவிப்புவெளியானதையடுத்து பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் தலைமையில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி பட்டாசு வெடித்து கொண்டாடினார்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும். தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமாருக்கும் நன்றி தெரிவித்து கோஷமிட்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சருக்கு

இருக்கும் அதிகாரம் எனக்கு இல்லை!

பா.ஜ.க. உறுப்பினர் கேள்விக்கு புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி வேதனை!

புதுச்சேரி, மார்ச் 27 - புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெறாவிட்டால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் புதுச்சேரி மாநிலம் பின்தங்கிய நிலையில் தான் இருக்கும் என முதல்வர் ரங்கசாமி ஆதங்கப்பட்டார்.

புதுச்சேரி சட்டப்பேரவை கடந்த 10-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.நேற்று முன்தினம் சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது புதிய தொழிற்சாலைகள் கொண்டுவருவது குறித்து சூடான விவாதம் நடந்தது.

அசோக்பாபு(பாஜ): புதுவை மாநிலத்தில் புதிதாக தொழில் தொடங்க ஏதுவாக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தும் திட்டம் அரசிடம் எந்நிலையில் உள்ளது? கரசூரில் தொழில் பூங்கா அமைக்க ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளதால் தொழில் முனைவோருக்கு எப்போது இடத்தை அரசு பிரித்து வழங்கும் என்று கேள்வி எழுப்பினார்.

முதலமைச்சர் ரங்கசாமி: கரசூரில் மனைகளாக பிரிக்கும் பணி நடந்து வருகிறது. ஜீன் மாதம் தொழிற்சாலைகளுக்கு நிலம் பிரித்து கொடுக்கப்படும். முதலீட்டாளர்கள் மாநாடு நடத்துவது குறித்து பரிசீலித்து வருகிறோம். யார் வருவார்கள்? என தெரியவில்லை?

அசோக்பாபு (பா.ஜ.க.): புதிய தொழிற்சாலைகள் அமைக்க தொழிலதிபர்கள் தயாராக உள்ளனர்.

முதலமைச்சர் ரங்கசாமி: தாராளமாக அழைத்து வாருங்கள். அவர்களுக்கு உடனடியாக நிலம் ஒதுக்கி தருகிறோம். தொழிற்சாலைகளை தொடங்க சொல்லுங்கள். ஒரு தொழிற்சாலை தொடங்க அனுமதி பெறுவது எவ்வளவு கடினமாக உள்ளது? என எல்லோருக்கும் தெரியும். இதனால்தான் ஒற்றை சாளர முறையை கொண்டுவந்தோம். தொழிற்சாலைகள் தொடங்கி விட்டு 3 மாதத்தில் அனுமதி பெறலாம் என கூறினோம். அதற்கு பிறகும் எந்த தொழிற்சாலையும் வரவில்லை. அதேநேரத்தில் அண்டைமாநிலமான தமிழகத்தின் வானூர், இரும்பையில் பல தொழிற்சாலைகளை பார்க்க முடிகிறது. அதுவும் எவ்வளவு சீக்கிரத்தில் வருகிறது என்பதை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அந்த அளவிற்கு அவர்களுக்கு உள்ள அதிகாரம் தான் முக்கிய காரணம்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று, பல்வேறு தொழில் முனைவோரை சந்தித்து தொழிற்சாலை துவங்க அழைப்பு விடுத்தார். அவர்களும் தமிழ்நாடு முதல்வரை நேரில் சந்திக்கின்றனர். அவரும் பல சலுகைகள் அளித்து தொழிற்சாலைகள் வருகின்றன. ஆனால் புதுச்சேரியில் அதுமாதிரி எந்த அதிகாரமும் முதல்வருக்கு இல்லை. அதாவது தமிழ்நாடு முதல்வருக்கு இருக்கும் அதிகாரம் எனக்கு இல்லை. இங்கு ஒரு தொழிற்சாலை தொடங்குவது எவ்வளவு பெரிய சங்கடமாக உள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும். நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளுக்கு சலுகை வழங்க, ஒன்றிய அரசின் அனுமதிக்காக காத்திருக்க வேண்டி உள்ளது. மின் இணைப்பு பெறுவதற்கே தொழிலதிபர்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். இதற்கு காரணம் நிர்வாகம் தான். தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுப்பது சம்பந்தமாக தலைமைச் செயலர் அனுமதி அளித்து கோப்பு அளித்தால் தான் அரசு முடிவு செய்ய முடியும் என்ற நிலை உள்ளது. இதனால் தான் மாநில அந்தஸ்து வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். இது எனக்காக மட்டுமல்ல, எதிர்காலத்தில் யார் வந்தாலும், தேர்வு செய்யப்பட்ட அரசுக்கு அதிகாரம் வேண்டும் என்பதற்காக கேட்கிறோம். மாநில அந்தஸ்து பெறாவிட்டால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும், புதுவை பின் தங்கியே இருக்கும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான இந்திப் பெயர்களுக்கு – நாம் தமிழ்ப் பெயர்களை சூட்டுவோம்!

இது இரு மொழிக் கொள்கை நாடு! இது கலைஞர் - அண்ணாவின் நாடு!

சட்டப்பேரவையில் – டாக்டர் நா.எழிலன் பேச்சு!

சென்னை, மார்ச் 27 - சட்டப்பேரவையில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் தான் நிதி ஒதுக்குவோம் என ஒன்றிய அரசு வலியுறுத்துவது குறித்த தீர்மானத்தை கொண்டு வந்து டாக்டர் நா.எழிலன் பேசியதாவது:-

Official Languages Act, 1963 அதாவது ஒன்றிய அரசு, மாநில அரசுகளுக்கு எந்த மொழியில் தொடர்பு கொள்ள வேண்டுமென்ற அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு *Rules, 1976 amended in 1987, 2007, 2011* ஒன்றிய அரசு மாநில அரசுக்கு இந்தி மொழியில் அரசுக் கோப்புகள் அனுப்ப வேண்டும். சில மாநிலங்களுக்கு ஆங்கில மொழியில் அளித்தால், அதனுடைய *translation work* இந்தியில் இருக்க வேண்டுமென்ற நிலையை இந்த *amendment act, Official Language Rules, 1976*ல் பிரிவு *1(ii)* என்ன சொல்கிறதென்றால் இந்த அரசியலமைப்பு சட்டத்தின் சட்டத்திருத்தம் *Official Languages Act, 1963* "*They shall extend to the whole of India, except the State of Tamil Nadu*" அந்த "*except the State of Tamil Nadu*"தான் (மேசையைத் தட்டும் ஒலி) இது இருமொழிக் கொள்கையின் நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) இது பேரறிஞர் அண்ணாவின் நாடு, அப்படி என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாக இருக்கும்பட்சத்தில் தொடர்ச்சியாக ஒன்றிய அரசு *Bharatiya Nyaya Sanhita, Bharatiya Sakshya Adhiniyam, Bharatiya Nagarik Suraksha Sanhita, Vande Bharat, PM SHRI, Arogya Mandir, PM Kisan Yojana, PM Garib Kalyan Yojana, Deen Dayal Upadhyaya Antyodaya Yojana, Pradhan Mantri Ujjwala Yojana, Pradhan Mantri Fasal Bima Yojana, Beti Bachao, Beti Padhao scheme, Pradhan Mantri Krishi Sinchayee Yojana, Pradhan Mantri Jan Dhan Yojana, Gramodaya Se Bharat Uday Abhiyan, Vishwakarma* என்று தொடர்ச்சியாக இந்தி பெயரில் திட்டங்களைத் தீட்டி, ஒவ்வொரு மாநில அரசும், அந்த திட்டங்கள், கோப்புகளில் அதை வாசிக்கும் நிலையை ஏற்படும்பட்சத்தில் நாம் இருமொழிக் கொள்கையை அரசியலமைப்பு சட்டத்தில் அங்கீகாரம் பெற்ற தமிழ்நாட்டில் நாம் ஒரு 'ரூ' போட்டதற்கு ருத்ரதாண்டவம் ஆடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு 'ரூ' போட்டதற்கு. இவ்வளவு, பல திட்டங்களுக்கு இந்தி பெயரைத் திணித்து, அந்த இந்திப் பெயரை பயன்படுத்தாவிட்டால், மும்மொழிக் கொள்கையைபின்பற்றாவிட்டால் உங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய மாட்டோம் என்று சொல்வது எந்த விதத்தில் நியாயம். *Sarva Shiksha Abhiyan (SSA)* அனைவருக்குமான கல்வித் திட்டம் என்ற அழகான தமிழில் இருக்கும் போது, *SSA, SSA, SSA, Jal Jeevan, Jal Jeevan, Jal Jeevan* என்று நம்மை மொழியை பழக்குவிக்க மறைமுக முயற்சியில் ஒன்றிய அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக களம்கண்ட தந்தை பெரியார் அவர்கள் 1938 ஆம் ஆண்டு ஒரு அறிக்கை வெளியிடுகிறார்கள். மாகாணத்தில், நம் களத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அரசு திட்டங்கள் வழியாக ஒவ்வொரு வீட்டில் தண்ணீர் குழாய் போல் இந்தியைத் திணிக்கிறார்கள். இதை எதிர்த்து நாம் களமாட வேண்டும் என்ற நிலையை உங்களுக்கு விளக்கிவிட்டு, இருமொழிக் கொள்கை இந்த தமிழ் நாட்டின் அடிப்படைக் கொள்கை, அந்த அடிப்படைக் கொள்கையை நிலை நிறுத்தி, இதுவரை வாசித்த இந்திப் பெயர்கள் அனைத்திற்கும் அழகான தமிழ்ப் பெயரில் திட்டங்களை தீட்டி நாம் வழங்குவோம் என்று கூறி, தமிழ்நாட்டு முதல்வர் திராவிட மாடல் முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

இவ்வாறு டாக்டர் நா.எழிலன் பேசினார்.

நெல்லை மாவட்டம் தெற்கு கள்ளிகுளம் அரசு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டும் பணிகளை மாவட்ட ஊராட்சி மன்றக் குழு தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் தலைமையேற்று துவக்கி வைத்தார். நிகழ்வில் கள்ளிகுளம் பனிமாதா திருத்தல பங்குத்தந்தை ததேயுஸ் ராஜன் அடிகளார் அர்ச்சித்தார் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர்.ஜெபஸ்டின் ஆனந்த் , வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்.ஆட்லின் செரிபா, கள்ளிகுளம் மருத்துவ அலுவலர் டாக்டர்.நவின், ஒன்றிய கவுன்சிலர் இசக்கி பாபு உறுமன்குளம் பொன் இசக்கி, சண்முக சுந்தரம், திரவியம் டெர்மின், ஜெபஸ்டின் நிமலேஷ் , குணசேகரன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.